திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
பகுதி நேர விரிவுரையாளர்கள் / போதனாசிரியர்களாக வெளிவாரி வளவாளர்களைப் பதிவு செய்தல் - கல்வி ஆண்டு 2022

இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கான வெளிவாரி வளவாளர்களைப் பதிவுசெய்வதற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் / அதிபர்களினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இந்த தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் வெளிவாரி அடிப்படையில் விரிவுரைகளை மேற்கொள்ளவுள்ள பாடங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் போன்றவற்றை தாம் கடமையாற்ற விரும்பும் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் / அதிபர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதனை தங்களது முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட (9″× 4″ அளவு நீளம் கொண்ட) கடித உறையினை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘வெளிவாரி வளவாளர்’’ எனக் குறிப்பிடவும். அவ்வாறின்றேல் உரிய தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு வருகைதந்து இவ்விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. இத்தகைய விபரங்கள் அடங்கிய கையேட்டைப் பெற்றுக்கொள்ள முடியுமான இறுதித் திகதி 2022.02.28 ஆகும். ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பாரமெடுக்கப்படும் இறுதித்திகதி 2022.03.15 ஆகும்.

4. விண்ணப்பதாரிகளுக்கான பொது அறிவுறுத்தல்கள் :-

I. விண்ணப்பதாரிகள் தமது கல்வித் தகைமை, தொழிற்தகைமை மற்றும் தொழில்நுட்பத் துறையில் பெற்றுள்ள தகைமைகள் மற்றும் குறித்த பாடங்களைக் கற்பித்தல் தொடர்பில் அல்லது குறித்த துறையில் செயலாற்றுதலில் உள்ள அனுபவம் பற்றிய சகல விபரங்களும் விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் போது குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப்பற்றி கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

II. **<u>விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவு</u>**
வெளிவாரி வளவாளர்களுக்கு செய்யப்படும் கொடுப்பனவு அவர்களது தகைமைகள், அனுபவங்கள் மற்றும் அவர்கள் கற்பிக்கும் பாடநெறிகளின் மட்டம் என்பவற்றிற்கமைய ஒரு மணித்தியாலத்திற்கு 500/= முதல் 1000/= ரூபா வரை வேறுபடும்.

III. **<u>விண்ணப்பங்கள் அனுப்பும் முறை</u>**
அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் வெளிவாரி வளவாளரால் தங்களது வழமையான கடமைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை திணைக்களத் தலைவர் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

IV. **<u>தெரிவு செய்தல்:</u>**
தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளரினால் / அதிபரினால் நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு பதிவு செய்யப்படுவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவுசெய்யப்படும் போது உரிய பாடங்களைக் கற்பித்த அனுபவம் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி நியமனங்களை குறித்த கல்லூரிகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு எழுத்து மூலம் உரிய காரணத்தை தெரிவித்து கல்லூரிப் பணிப்பாளரினார் / அதிபரினால் முடிவுறுத்த முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

V. இவ்வாறு பதிவுசெய்யப்படும் வெளிவாரி வளவாளர்கள், விரிவுரைகளுக்குரிய வருட இறுதி / உள்ளகப் பரீட்சைகளை எவ்வித மேலதிகக் கட்டணமும் இன்றி நடாத்துதல் வேண்டும்.

5. இந்தப் பதிவு நடவடிக்கையானது, 2022 ஆம் கல்வி ஆண்டிற்கு மட்டுமே உரியதாகும் என்பதுடன், எந்தவொரு நிரந்தரப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையதல்ல.

6. விண்ணப்பங்களை அனுப்புகின்ற போது ஒரு பாடத்திற்கு மேல் விண்ணப்பிப்பதாக இருப்பின், ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளருக்கு / அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்.

ஸ்.சி.ஜகத்
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும்
பயிற்சித் திணைக்களம்.

த.பெ.இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

தொழில் நுட்பவியல் கல்லூரிகளின் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப் பட்டியல்

தொடர் இல.	தொழில்நுட்பவியல் கல்லூரிகள் / தொழில்நுட்பக் கல்லூரிகள்	விலாசம்	தொலைபேசி இலக்கம்	மாவட்டம்
01	அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி	இங்கினியாகல வீதி, அம்பாறை	063-2223485 063-2224236	அம்பாறை
02	அநுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி	புதிய நகரம், அநுராதபுரம்	025-2222666 025-2224710	அநுராதபுரம்
03	பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரி	கிறீன்லேண் டிரைவ், பதுளை.	055-2222413 055-2225640	பதுளை
04	காலி தொழில்நுட்பவியல் கல்லூரி	களுவெல்ல, காலி	091-2234051 091-2225985 091-2234871	காலி
05	யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி	பிறவுண்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.	021-2220028 021-2222358	யாழ்ப்பாணம்
06	இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி	ஒல்கொட் மாவத்தை, கொழும்பு- 10.	011-2324177 011-2423653	கொழும்பு
07	இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரி	பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி.	045-2232390 045-2224715	இரத்தினபுரி
08	கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி	அறுப்பொல, கண்டி	081-2224063 081-2211810	கண்டி
09	குருநாகல் தொழில்நுட்பவியல் கல்லூரி	புத்தளம் வீதி, குருநாகல்.	037-2223264 037-2227611	குருநாகல்
10	அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி	பிரதான வீதி, அக்கரைப்பற்று.	067-2279326 067-2279602	அம்பாறை
11	ஆணமடுவ தொழில்நுட்பக் கல்லூரி	நவகத்தேகம பூமி, ஆணமடுவ	032-2263288 032-2263163	புத்தளம்
12	பலப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி	புகையிரத நிலைய வீதி, வந்ததுவ, பலப்பிட்டி.	091-2258096 091-2255248	காலி
13	பண்டாரவளை தொழில்நுட்பக் கல்லூரி	வெவதென்ன, பண்டாரவளை	057-2222754 057-2233753	பதுளை
14	மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி	மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு	065-2246557 065-3659455	மட்டக்களப்பு
15	பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி	புவக்தண்டாவ, பெலியத்த.	047-2243229 047-2251255	அம்பாந்தோட்டை
16	தம்புள்ளை தொழில்நுட்பக் கல்லூரி	மாத்தளை வீதி, தம்புள்ளை	066-2284713 066-2284885	மாத்தளை
17	தெஹியத்தகண்டி தொழில்நுட்பக் கல்லூரி	மகவனாவெல, தெஹியத்தகண்டி	027-2250117 027-2250262	அம்பாறை
18	எம்பிலிப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி	புதிய நகரம், எம்பிலிப்பிட்டி	047-2261037 047-2261608	இரத்தினபுரி
19	கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி	வெரல்லவத்தை, யக்கல	033-2222132 033-2233253	கம்பஹா
20	ஹசலக தொழில்நுட்பக் கல்லூரி	யோத எல வீதி, ஹசலக	055-2257129 055-2258225	கண்டி
21	ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி	கொடகம, ஹோமாகம	011-2855315 011-2857133	கொழும்பு

22	களுத்தறை தொழில்நுட்பக் கல்லூரி	கலமுல்லை, களுத்தறை	034-2222325 034-2236622	களுத்தறை
23	கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி	கச்சேரி வீதி, கேகாலை.	035-2222441 035-2223319	கேகாலை
24	குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி	பன்னல வீதி, குளியாப்பிட்டி	037-2281181 037-2281271	குருநாகல்
25	மன்னார் தொழில்நுட்பக் கல்லூரி	பன்னை, வெட்டுவான் சந்தி, மடு வீதி	023-3238532	மன்னார்
26	மாத்தளை தொழில்நுட்பக் கல்லூரி	எம்.சீ. வீதி, மாத்தளை	066-2224196 066-2224847	மாத்தளை
27	மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி	மெத்தெவத்தை, மாத்தறை	041-2222565 041-2229998	மாத்தறை
28	மெதகம தொழில்நுட்பக் கல்லூரி	பிபிலே வீதி, மெதகம	055-2266113 055-2266112	மொனராகல
29	மொனராகல தொழில்நுட்பக் கல்லூரி	சிரிகல, மொனராகல	055-2276167 055-2277448	மொனராகல
30	நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி	ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா	052-2222658 052-2235895	நுவரெலியா
31	பாத்ததும்பறை தொழில்நுட்பக் கல்லூரி	நவயாலதென்ன, கடுகஸ்தோட்டை	081-2499782 081-2500441	கண்டி
32	பொலன்னறுவை தொழில்நுட்பக் கல்லூரி	வித்தியாபுர, பொலன்னறுவை	027-2224429 027-2224428	பொலன்னறுவை
33	இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி	காலி வீதி, இரத்மலானை	011-2632778 011-2626955 011-2612877	கொழும்பு
34	சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி	அம்பாறை வீதி, சம்மாந்துறை	067-2260933 067-2260086	அம்பாறை
35	திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி	மிகிந்தபுர, திருகோணமலை	026-2223034 026-2227956	திருகோணமலை
36	வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி	மன்னார் வீதி, வவுனியா	024-2223664 024-2226720	வவுனியா
37	வறக்காப்பொல தொழில்நுட்பக் கல்லூரி	அங்குருவெல்ல வீதி, வறக்காப்பொல.	035-2267651 035-2268302	கேகாலை
38	வாரியப்பொல தொழில்நுட்பக் கல்லூரி	சிலாபம் வீதி, வாரியப்பொல	037-2267256 037-2268380	குருநாகல்
39	வீரவில தொழில்நுட்பக் கல்லூரி	புதிய நகரம், வீரவில	047-2237064 047-2237032	அம்பாந்தோட்டை